ஆலங்காயம் ஊராட்சி கொத்தகோட்டை கிராம ஊராட்சிமன்ற
தலைவர் அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை திருமதி.J.மேனகா

ந.க.அ3/ 2024 நாள்: 20.11.2023

பொருள் : மனைப்பிரிவு திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கொத்தகோட்டை ஊராட்சி கொத்தகோட்டை கிராம சர்வே எண்.80/1A1, 80/1A3, 0.73½ சென்ட் பரப்பில் அமைந்துள்ள மனை பிரிவிற்கு 1 முதல் 20 (இருபது காலி மனைகள்) விற்பனை செய்திட அனுமதி அளித்து உத்திரவிடுதல் சார்பு.

பார்வை :
1. மாவட்ட நகர ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பத்தூர் அவர்களின் ROC.No.BS26Q7CQ/2023 நாள் : 02.11.2023
2. அரசாணை நிலை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் : 04.05.2017.
3. அரசாணை நிலை எண்.141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் : 23.09.2020.
4. அரசாணை நிலை எண்.181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, நாள் : 09.12.2020.
5. மனுதாரர் திரு.A.அஜீம்கான் அவர்களின் விண்ணப்பம் எண். ROC.No. BS26Q7CQ/2023 நாள் : 02.11.2023.
6. ஊராட்சி தான பத்திர ஆவண எண்.8298/2023 நாள்:28.10.2023.
7. மின்சாரத்துறை தானப்பத்திர ஆவண எண்.8298/2023 நாள்:28.10.2023.
8. ஊராட்சிமன்ற தீர்மான எண்.306/20.11.2023.

****

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கொத்தகோட்டை ஊராட்சி, கொத்தகோட்டை கிராம சர்வே எண்.80/1A1, 80/1A3, 0.73½ சென்ட் பரப்பில் அமைந்துள்ள 20 காலி மனைகளை விற்பனை செய்திட கூராய்வு மற்றும் அங்கீகாரம் கட்டணம் ஆகியவை உரிய தலைப்பில் செலுத்தப்பட்டது.

வ.எண்	திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கொத்தகோட்டை ஊராட்சி கொத்தகோட்டை கிராம சர்வே எண்.80/1A1, 80/1A3, 0.73½ சென்ட் பரப்பில் அமைந்துள்ள காலி மனைகளுக்கான விபரம்		
1.	மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பளவு	2974.41 ச.மீ	விபரம்
2.	மொத்த மனைகளின் விபரம்	20 மனைகள்	1 முதல் 20 வரையிலான மொத்த மனைகள்
3.	பொது உபயோகம் TANGEDCO ஒதுக்கீடு திறவிடம்	25.5 ச.மீ 18.24 ச.மீ 6.74 ச.மீ	ஊராட்சி தான பத்திர ஆணை எண்.8298/2023 நாள்: 28.10.2023

பார்வை(6)ல் காணும் ஆவணத்தின் மூலம் ஊராட்சிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது ஒதுக்கீடு மற்றும் பார்வை(7)ல் மின்சார துறைக்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆகியவை கொத்தகோட்டை ஊராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை(2)ல் காணும் அரசாணையின் ஊராட்சிக்கு செலுத்த வேண்டிய கூராய்வு கட்டணம் மற்றும் அங்கீகார கட்டணம் ஆகியவை உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனைபிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க கொத்தகோட்டை ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தீர்மானம் எண்.306/20.11.2023 இதனடிப்படையில் மேற்படி மனை பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்திரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :-

1. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பரிவிற்கு இறுதி ஒப்பதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் எவ்வித முன் அறிவிப்பியின்றி இரத்து செய்யப்படும்.

2. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையில் நில உரிமம் இல்லாத மனைப்பரிவு அங்கிகரிக்கப்பட்ட காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முயாதெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் மேற்படி வீட்டு மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ஊராட்சிமன்ற தலைவர்
தலைவர்
கொத்தக்கோட்டை ஊராட்சி
ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியம்
திருப்பத்தூர் மாவட்டம்

பெறுநர்

திரு.A.அஜீம்கான்
த/பெ.அஹமத்கான்
எண்.6/31, சையத் ஹயாத் பாஷா தெரு
நூருல்லாபேட்டை, வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்

நகல் :

1. சார்பதிவாளர்
சார்பதிவாளர் அலுவலகம்,
வாணியம்பாடி-635751,
திருப்பத்தூர் மாவட்டம்.
2. DTCP திருப்பத்தூர்
3. பணிவு உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருப்பத்தூர்.